# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 78/மா/2022**

**நாள்: 10.09.2022**

திரு. ஜெ. புகழ்பாலன்,
மாடம்பாக்கம், சென்னை. – முறையீட்டு மனுதாரர்

1. ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி.
2. உதவி வருவாய் அலுவலர்,
   மண்டலம் - 5,
   பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

சென்னை, மாடம்பாக்கம், பதுவஞ்சேரி, கரிகாலன் 2–வது குறுக்குத் தெரு, கதவு எண்.7 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ.புகழ்பாலன் என்பவரின் 10.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.06.2022 அன்று பெறப்பட்டு 78/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொண்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, மாடம்பாக்கம், பதுவஞ்சேரி, கரிகாலன் 2–வது குறுக்குத்தெரு, கதவு எண்.7 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ.புகழ்பாலன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது 10.06.2022 நாளிட்ட மனுவில்,

> “எனக்கு சொந்தமான வீட்டுமனை சென்னை எழும்பூர் F2 காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பழைய கதவு எண்.27, புதிய கதவு எண்.51/105, பெருமாள் ரெட்டித்தெரு, எழும்பூர், சென்னை–8-ல் உள்ளது. இந்த வீட்டுமனைக்கு போலி பத்திரம் தயாரித்து 25.06.2018 அன்று 1. சாந்தகுமாரி, 2. சர்மிளா, 3. கிஷோர் குமார், 4. வனஜா ஆகியோர் பொய்யான முகவரி 51/1 என்றும் 107 என்றும் “உதவி வருவாய் அலுவலர்” பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி – 5 சென்னை-21-ல் போலி வரி செலுத்தி எனக்கு சொந்தமான வீட்டு மனையை அபகரித்துள்ளார்கள். இதனால் 7.2.2022 அன்று உயர்திரு ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003-ல் தபால் பிரிவில் மேற்கூறிய நால்வரையும் கைது செய்து குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் பெருநகர சென்னை மாநகராட்சி நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யவும் புகார் அளித்தும் மேற்கூறிய

நால்வர் மீதும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததால் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் 1. சாந்தகுமாரி 2. சர்மிளா 3. வனஜா 4. கிஷோர் குமார் ஆகியோர் மீது உயர்திரு. ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை-3" குற்றவியல் நடவடிக்கை எடுக்க உத்தரவும், ஆணையும் வழங்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2. சாந்தகுமாரி (2) சர்மிளா (3) கிஷோர் குமார் (4) வனஜா மற்றும் எந்தவொரு ஆவணங்கள், சொத்துவரி இல்லாத ஆதரவாளர்கள் (5) மேரிசேரா (6) எலிசா (7) பாஸ்கர் (8) செல்வி ஆகியோர் பெருநகர சென்னை மாநகராட்சி அனுமதி பெறாமல் ஆக்கிரமித்து கட்டியிருக்கும் கட்டமைப்புகள் (கட்டடங்கள்) ஆகியவற்றிற்கு "Lock and Seal and demolition Notice" உயர்திரு ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை-3 வழங்க உத்தரவும், ஆணையும் வழங்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அனுமதி பெற்றிருந்தால் மேற்கூறிய 8 பேரிடம் 1. கட்டட வரைபட நகல் 2. வீட்டு மனை பத்திரம் நகல் 3. சொத்துவரி அட்டை நகல் 4. பட்டா நகல் ஆகியவைகளை வழங்கும்படி உத்தரவும், ஆணையும் வழங்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

3. 7.2.2022 நாளிட்ட புகார் மனு மீது எந்தவொரு உரிய நடவடிக்கையும் உயர்திரு. ஆணையர் பெருநகர மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை – 3 நாளது தேதிவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் சட்டப் பிரிவு 4&6 (1)-ன் கீழ் 24.3.2022 அன்று 7 இனங்களில் தகவல் வழங்க கேட்டு உயர்திரு பொது தகவல் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சியில் தபாலில் விண்ணப்பித்தேன். நாளது தேதிவரை எந்த தகவலும் வழங்காததால் 4.5.2022 அன்று "மேல்முறையீட்டு அலுவலரும் எந்த தகவலும் வழங்காததால் 6.6.2022 அன்று "இந்திய சாட்சிய சட்டம் - 1872– ன் பிரிவு 101-ன்படி, 15 தினங்கள் கொண்ட சட்டப்படியான அறிவிப்பின் மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் சட்டப் பிரிவு 7.2.2022 நாளிட்ட புகார் மனுவிற்கு 4&6(1)-ன் மற்றும் 19 (1)-ன் மேல்முறையீட்டு மனு மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 1872-ன் பிரிவு 101-ன்படி 7 இனங்களில் "மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், பொது தகவல் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை-3க்கு உத்தரவும், ஆணையும் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

4. வழக்கு எண்.5263/1995 "சுகுமார் என்பவர் மீது பொய் வழக்கு போட்டு 216 சதுர அடிக்கு பொய்யான உத்தரவும், ஆணையும் பெற்று வழக்குக்கு சம்பந்தமில்லாத என்னுடைய தாத்தா (என் அம்மாவின் தந்தை) ந.முனுசாமி வீட்டை இடித்தும், என்னுடைய பாட்டி (என் அம்மாவின் தாய்) மேரியம்மாள் வீட்டையும் இடித்து காலஞ்சென்ற D. சதானந்தத்தின் வாரிசுகளான 1. சாந்தகுமாரி 2. சர்மிளா 3. கிஷோர் குமார் 4. வனஜா மற்றும் இவர்களின் ஆதரவாளர்கள் 5. மேரி சேரா 6. ஏலிசா 7. பாஸ்கர் 8. செல்வி எனக்கு சொந்தமான வீட்டு மனையில் ஆக்கிரமித்துள்ளதால் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் (City Civil Court) RK-1 பதிவறையில் நல்ல நிலையில் உள்ள வழக்கு எண்.5263/1995 வழக்கு கட்டிலிருக்கும் அனைத்து ஆவணங்களின் நகல்கள் வழங்க "மாண்புமிகு முதன்மை நீதிபதி அவர்களுக்கு உத்தரவும், ஆணையும் வழங்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 4.7.2022 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

மனுதாரர் தனது கோரிக்கைக்கு ஆதாரமாக உரிய ஆவணங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

4.7.2022 அன்றைய நேரடி விசாரணையில் உதவி வருவாய் அலுவலர் மண்டலம் – 5 ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-5ல் 20.6.2022-லிருந்து இம்மண்டலத்தில் உதவி வருவாய் அலுவலராக பணியாற்றி வரும் நான், மாநகராட்சி வழக்கறிஞர் ஒருவருடன் இம்முறை மன்றத்தில் ஆஜராகிறேன்.

சென்னை எழும்பூர் பெருமாள் ரெட்டி தெருவில் அமைந்துள்ள 1200 சதுர அடி அளவுகொண்ட இடத்திற்கு போலியாக வரி விதிப்பு மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மனுதாரரின் புகார் மனுவின் மீதும் மனுதாரரிடமும் உரிய விசாரணை மேற்கொண்டு போதிய விளக்கமளிக்க 15 நாட்கள் கால அவகாசம் அளிக்கும்படியும், கால அவகாசத்திற்குள் மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக விவரங்களை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 5ன் உதவி வருவாய் அலுவலர் அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து அறிக்கை ஒன்றை முறைமன்றத்திற்கு அளிக்க 15 நாட்கள் கால அவகாச வேண்டுகோளை ஏற்று மனுதாரரின் ஆவணங்களைப் பரிசீலித்து 15 நாட்களில் இம்முறைமன்றத்திற்கு அறிக்கை அளிக்க உத்தரவிடப்பட்டது.


உதவி வருவாய் அலுவலர் மனுதாரரை விசாரித்து, தனது 15.7.2022 நாளிட்ட அறிக்கையில், பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

திரு. புகழ்பாலன் என்பவரின் முறையீட்டு மனுவின் பொருட்டு கடந்த 04.07.2022 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் நேரடி விசாரணைக்கு ஆஜராகி மேற்கண்ட முறையீட்டு மனு மீது அறிக்கை சமர்ப்பிக்க 15 நாட்கள் அவகாசம் கோரி அனுமதி பெறப்பட்டது.

திரு. புகழ்பாலன் அவர்களுக்கு 05.07.2022 நாளிட்ட கடிதத்தில் 08.07.2022, 11.07.2022 அல்லது 13.07.2022 ஆகிய ஏதேனும் ஒரு நாளில் மாலை 4.30 மணிக்கு மேல் மண்டல அலுவலகம்-5, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 21ல் உரிய ஆவணங்களுடன் ஆஜராகி அவரின் கோரிக்கைகளை சமர்ப்பிக்க கடிதம் அனுப்பியதின் பேரில், தனியர் ஆஜராகி ஆவணங்களை சமர்ப்பித்தார்.

இதன் தொடர்ச்சியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் மண்டலம்-5ன் 15.7.2022 நாளிட்ட விசாரணை அறிக்கை பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>**விசாரணை அறிக்கை**</u>




பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 5, கோட்டம் - 61, கதவு எண்.27, புதிய கதவு எண்.51/15, பெருமாள் ரெட்டி தெரு, சென்னை – 08, என்ற முகவரியில் உள்ள வீட்டு மனையானது திருமதி. அமிர்தம்மாள் அவர்களுக்கு சொந்தமானது எனவும் அவர்களது மறைவுக்குப் பிறகு திரு. சதானந்தத்தின் வாரிசுகளான திருவாளர்கள் சாந்தகுமாரி, கிஷோர் குமார், வனஜா மற்றும் ஷர்மிளா ஆகிய 4 பேரும் முத்தம்மாள் என்ற பெயரில் போலி ஆவணம் மூலமாக அவ்விடத்தை அபகரித்து அதற்கு சொத்து வரி எண் 05-061-04 717-000 என்ற எண்ணில் சொத்து வரி செலுத்தப்பட்டு வருவதாகவும் அதனை ரத்து செய்து சட்டப்படி அவ்வீடு, மனை மேற்கண்ட அட்டவணையில் உள்ளவாறு (Family Tree) வாரிசு என்ற முறையில் அதனை தனக்கு கிடைக்க ஆவன செய்யுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மூலமாக நடவடிக்கை எடுக்க கோரி மனு அளித்திருந்தார்.

மேற்கண்ட 10.6.2022 நாளிட்ட மனுவின் பொருட்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மூலமாக 23.06.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக 04.07.2022 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் நேரடி விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு கடிதம் அனுப்பப்பட்டது. அவ்வாறே மேற்குறிப்பிட்ட நாளன்று விசாரணைக்கு ஆஜரானபோது விசாரணை அதிகாரியிடம் எனது விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க 15 நாட்கள் அவகாசம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

திரு.புகழ்பாலன் அவர்களுக்கு மண்டலம்-5ல் நேரடி விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் 08.07.2022, 11.07.2022 அல்லது 13.07.2022 ஆகிய மூன்று தினங்களில் ஏதேனும் ஒரு நாளில் கலந்துகொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன்படி திரு. புகழ்பாலன் கடந்த 11.07.2022 அன்று மதியம் 1.00 மணியளவில் விசாரணையில் கலந்துகொண்டார்.

விசாரணையின் போது திரு. புகழ்பாலனிடம் கதவு எண்.27, புதிய எண்.51/105, பெருமாள் ரெட்டி தெரு, எழும்பூர், சென்னை-08 என்ற முகவரியிலுள்ள மனையில் கட்டப்பட்ட வீட்டிற்கான ஆவணங்களை சமர்ப்பிக்க கோரியதில் தனியர் ஆவணங்களை சமர்ப்பித்தார். அவர் சமர்ப்பித்த ஆவணங்களை கூர்ந்து ஆய்வு செய்ததில் மேற்குறிப்பிட்ட இடம் திரு.ராஜ்மல் சௌகார் அவர்களிடமிருந்து அமிர்தம்மாள் அவர்கள் கிரையம் பெற்றதாகவும் அக்கிரையத்திற்கு சாட்சியாக திரு.சாமுவேல் சுப்பிரமணி அவர்கள் இருந்ததாகவும் ஆவணத்தின் வாயிலாக தெரியவருகிறது.

ஆனால், மனுதாரரை விசாரித்த போது, திரு. சாமுவேல் சுப்பிரமணிதான் அவ்விடத்தின் உரிமையாளர் எனவும், ஆவணம் எழுதும்போது தவறுதலாக அமிர்தம்மாள் உரிமையாளர் என்றும் சாமுவேல் சுப்பிரமணி அவர்கள் நிர்வாகி என்றும் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் (Family Tree) கண்டவாறு திருமதி. அமிர்தம்மாள், முருகேசன் தம்பதியின் வாரிசுதாரர்களாக திருமதி. மேரியம்மாளும், திரு. முனுசாமி ஆகிய இருவருமே என விசாரணையில் தெரிவித்துள்ளார். ஆனால் அதற்குண்டான வாரிசு சான்றிதழ் ஆவணத்தை அளிக்கவில்லை. அமிர்தம்மாள் வாரிசான மேரி அம்மாள், சாமுவேல் சுப்பிரமணி தம்பதியின் ஒரே வாரிசு திரு. ஜெயபாலன் இதற்கான வாரிசு சான்றிதழை அளித்துள்ளார். மேலும் திரு. ஜெயபாலன் என்பவர் மனுதாரரின் தகப்பனார் ஆவார். ஆகவே அதனை அடிப்படையாகக் கொண்டு திருமதி அமிர்தம்மாள் அவர்களின் மறைவுக்குப் பிறகு மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள மனை, வீடு ஆகியவை வாரிசு என்ற முறையில் தமக்கு கிடைக்கப்பெறவேண்டும் எனவும், ஆனால் ஆவணங்கள் திருடப்பட்டு திருவாளர்கள். சாந்தகுமாரி, கிஷோர் குமார், ஷர்மிளா மற்றும் வனஜா ஆகியோர் வசம் இருந்து அதனை மீட்டுத் தருமாறு கோரி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் கோரிக்கை வைத்துள்ளார். மனுதாரரின் கோரிக்கை முறையான ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காததால் இவரது கோரிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சியால் தீர்வு செய்ய இயலாத நிலை உள்ளது. ஆகவே மனுதாரர் முறையான ஆவணங்களுடன் மாண்பமை நீதிமன்றத்தினை அணுகி உரிய தீர்வினை மேல்முறையீடு மூலம் பெற்றுக் கொள்ளலாம் என இவ்வறிக்கை மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது என மண்டலம்-5ன் உதவி வருவாய் அலுவலர் தனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மண்டலம் - 5ன் உதவி வருவாய் அலுவலரது அறிக்கையைப் பரிசீலித்த பின்னர், மனுதாரர் திரு. J. புகழ்பாலனை மீண்டும் ஒருமுறை விசாரணை செய்ய முடிவு செய்யப்பட்டு, 1.9.2022 அன்று இம்முறைமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரர் **திரு. J. புகழ்பாலன் 1.9.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது கைப்பட எழுதிய வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"எனது உண்மையான வாக்குமூலமாக பதிவு செய்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சி நடுவர் மன்றத்தில் 1. உயர்திரு பெருநகர சென்னை மாநகராட்சி 2. உதவி வருவாய் அலுவலர் இருவர் மீதும் போலி பத்திரம் தயாரித்தும், போலி வரி செலுத்தியும் 1. சாந்த குமாரி 2. சர்மிளா 3. கிஷோர் குமார் 4. வனஜா 5. மேரிசேரா 6. லிடியா எலிசபெத் 7. ஜான்சி ஆகியோர் எனக்கு சொந்தமான வீட்டுமனையை அபகரித்துள்ளதால் "Lock and Seal Demolition" உத்தரவு வழங்கும்படியும் மனு அளித்தேன் இந்த விசாரனையானது 4.7.2022 அன்று நடைபெற்றது. விசாரணை இறுதியில் தாங்கள் 1.உதவி ஆணையர் 2. உதவி வருவாய் அலுவலர் விசாரணை அறிக்கையை தாக்கல்

செய்ய உத்தரவு வழங்கினீர்கள். அதனடிப்படையில் உதவி வருவாய் அலுவலர் 11.7.2022 அன்று விசாரணை மேற்கொண்டார். என்னை நேரடியாக அழைத்து விசாரணை செய்து என்னிடம் உள்ள அனைத்து ஆவணங்களின் நகல்களையும், வாரிசு சான்று நகல்களையும் பெற்றுக்கொண்டு தங்களை திசை திருப்பும் விதமாக சொத்துரிமையை பிரச்சனை என்று திசை திருப்பும் அறிக்கையை வழங்கியுள்ளார். மேலும் பட்டவர்தனமாக என்மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக செயல்பட்டுள்ளார். தாங்கள் கருணை கூர்ந்து இந்த வாக்குமூலத்தை பரிசீலனை செய்து இத்துடன் இணைத்துள்ள ஒரு ஒரிஜினல் பத்திர நகல் (1) 2756/1939 (2) 2757/1939 (3) 2758 /1939 ஆகியவைகளை இணைத்துள்ளேன். மேலும் போலி பத்திர நகலையும் இணைத்து உள்ளேன். போலி வரி அட்டை நகலையும் இணைத்துள்ளேன். நிரந்தர நிலப்பதிவேடு (PZR) நகல் இத்துடன் இணைத்துள்ளேன். முறைகேடான ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுத்தும் "Lock and Seal & Demolition" உத்தரவிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் போலி பத்திரம் தயாரித்து ஆக்கிரமித்துள்ள 1. சாந்த குமாரி 2. சர்மிளா 3. கிஷோர் குமார் 4. வனஜா 5. மேரிசேரா 6. லிடியா எலிசபெத் 7. ஜான்சி ஆகியோரை நில அபகரிப்பின் கீழ் விசாரணை மேற்கொள்ள சென்னை மாநகர காவல் ஆணையாளர் அல்லது நீதிமன்றத்திற்கு உத்தரவிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் உதவி வருவாய் அலுவலர் மேற்கூறிய நபர்கள் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததால் இவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவரது வாக்குமூலம் மற்றும் உதவி வருவாய் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன :

மனுதாரர் திரு. J. புகழ்பாலன் தனது புகாரில் தெரிவித்துள்ளவாறு தனது புகாருக்கு ஆதாரமாக சம்பந்தப்பட்ட உரிய ஆவணங்களை 4.7.2022 அன்றைய விசாரணையின் போது இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்காததால், அவரது புகார் குறித்து உரிய ஆவணங்களை சரி பார்த்து அறிக்கை ஒன்றினை அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-5ன் உதவி வருவாய் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டது. அதன் பேரில், மண்டலம்-5ன் உதவி வருவாய் அலுவலர், மனுதாரர் திரு. J. புகழ்பாலனை விசாரணை செய்தபோது அவரது கோரிக்கைக்கு ஆதாரமாக தகுந்த உரிய ஆவணங்களை மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை என்பது தெரியவருகிறது. அதனால், மனுதாரர் முறையான ஆவணங்களுடன் மாண்பமை நீதிமன்றத்தினை அணுகி, உரிய தீர்வினை பெற்றுக்கொள்ளலாம் என மண்டலம் 5-ன் உதவி வருவாய் அலுவலர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் திரு. J.புகழ்பாலன் 1.9.2022 அன்றைய விசாரணையின்போது ஆஜராகி, மண்டலம்-5ன் உதவி வருவாய் அலுவலர் 11.7.2022 அன்று விசாரித்ததையும் தனது கோரிக்கைக்கு ஆதாரமாக சில ஆவணங்களை சமர்ப்பித்ததையும் மனுதாரரது வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது. ஆனால் உதவி வருவாய் அலுவலரின் அறிக்கையில் மனுதாரர் உரிய மற்றும் போதுமான ஆவண ஆதாரங்களை சமர்ப்பிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

மண்டலம் - 5ன் உதவி வருவாய் அலுவலரது 15.7.2022 நாளிட்ட அறிக்கை மற்றும் 1.9.2022 அன்று மனுதாரர் திரு. J. புகழ்பாலன் இம்முறைமன்றத்துக்கு அளித்த வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றைப் பரிசீலித்தப் பின் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது :

"மனுதாரர் திரு. J. புகழ்பாலன் அளித்த ஆவணங்களின் நகல்களை மண்டலம் - 5ன் மண்டல அலுவலர் / உதவி ஆணையருக்கு அனுப்பவும், அந்த ஆவணங்களைப் பரிசீலித்து மீண்டும் மண்டலம்-5ன் உதவி ஆணையர் / மண்டல அலுவலர் அளவில் மனுதாரரை நேரில் விசாரித்து ஆவணங்கள் மற்றும் விசாரணையின் அடிப்படையில் முடிவெடுத்து அம்முடிவினை மனுதாரருக்கு தெரிவிக்கவும், மற்றும் இதுகுறித்த அறிக்கை ஒன்றினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்துக்கு இரண்டு மாதங்களுக்குள் அளிக்க மண்டலம்-5ன் மண்டல அலுவலர் / உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது.

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**பெறுநர்**

1. திரு. ஜெ. புகழ்பாலன்,
த/பெ. M.S. ஜெயபாலன்,
எண்.7, கரிகாலன் 2வது குறுக்குத் தெரு,
பதுவஞ்சேரி, மாடம்பாக்கம்,
சென்னை – 600 126.
2. மண்டல அலுவலர்,
மண்டலம் - 5,பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.61, பேசன் பிரிஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
3. உதவி வருவாய் அலுவலர்,
மண்டலம் - 5,
எண்.61, பேசன் பிரிஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
4. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
5. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்**

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

12/9/22

செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம்
சென்னை-600 032